வேட்டுவருடையது.

எல்லாவற்றிலும் சிறப்பாகவும் வியப்பாகவும் தெரியவந்துள்ளது என்னவென்றால் தலையூர்க்காளியின் பரம்பரையினர் கரூர் அருகே புங்கம்பாடியிலும், புகளூரிலும் வாழ்ந்து வருவதும் தலையூர்க் காளி பயன்படுத்திய போர்க்கருவிகளை அவர்கள் பாதுகாத்து வருவதும் தங்களுக்கு கள ஆய்வு செய்ய உதவிய மறைந்த சின்னக்குத்தூசி, சுப்புலட்சுமி ஜெகதீசன், சு. செல்லப்பன் ஆகியோர்க்கு தெரியாத ஒன்று. இந்த உண்மை ஒரு வரலாறு எழுதுபவர்கள் அறியாமல் எழுதுவது வரலாற்றுப் பிழை.

அந்தப் போர்க்கருவிகளைத்தான் ஆய்வாளர் பரணன் எழுதிய பொன்னர் சங்கர் நூலின் முகப்பு அட்டையில் அச்சிட்டுள்ளார். மேலும் சுப்புலட்சுமி, செல்லப்பன் ஆகியோர் தங்களின் இன உணர்வால் தலையூர்க்காளி பற்றிய செய்தியையே அறிய விரும்பாததும் உங்களுக்கு வரலாற்று உண்மையை அவர்கள் கொடுக்க இயலாமல் போனது.

சென்ற வருடம் தஞ்சைப் பெரியகோயிலில் ராசராசன் 1000ஆம் ஆண்டு நிறைவு விழாவில் ஆயிரம் பேர் கலந்து கொண்டு நடனமாடிய நாட்டிய அஞ்சலி விழாவில் முன்னால் அமைச்சர் பொன்முடி அவர்கள் தாங்கள் வரலாற்றை அறிந்திருந்ததினால்தான் கொங்கு மண்டல மக்களுக்கு பொன்னர் சங்கர் கதையை தாங்கள் கொடுத்தவர் என்று தங்கள் முன்னிலையில் பேசினார். நான் அந்த விழாவில் கலந்து கொண்டவன். சோழ நாட்டுப் பகுதியில் தெலுங்குச் சோழர்கள் காலத்தில் நடந்த நிகழ்ச்சி அது. இதற்கும் பொன்னர் சங்கருக்கும் தொடர்பில்லை. தலையூர்க்காளிதான் கொங்கு மண்டலத்தைச் சார்ந்தவன். எனவே இது கொங்கு மக்கள் தொடர்புடைய கதையல்ல. பின்னால் அவர்கள் தெரிந்து கொண்ட கதை.

கரூரைச் சேர்ந்த உண்மையான வரலாற்று ஆய்வாளர் பரணன் அவர்கள் கரூர் மாவட்ட வரலாற்றுச் சங்கம் மூலம் வெளியிட்ட ‘‘பொன்னர் சங்கர் கதை ஒரு சமூகவியல் ஆய்வு’’ என்ற நூலில் எந்த வரலாற்று ஆய்வாளனுக்கும் கிடைக்காத வரலாற்றுச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு கள ஆய்வுகள் பலமுறை செய்து 10 ஆண்டுகள் ஆய்ந்து உழைத்து எழுதியது. இந்நூல் தங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் கனடா நாட்டு மானுடவியல் ஆய்வாளர் *பிருந்தாபெக்* அவர்களுக்கும் என் உறவினர் நூலை அனுப்பியுள்ளார்கள் என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அம்மையார் அவர்களும் நூல் கிடைத்தது பற்றி ஈ மெயில் அனுப்பியுள்ளார்கள். நான் தாங்கள் எழுதிய பொன்னர் சங்கர் புத்தகத்தையும் பரணன் அவர்களின் நூலையும் சக்திகனல் எழுதிய

அண்ணன்மார் சாமி கதை நூலையும் முழுமையாக படித்தறிந்த பிறகுதான் எனக்கு இவ்வரலாற்று நிகழ்ச்சியை எனது 67 ஆம் வயதில் தெரிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது.

"என்னுடைய கடிதம் யார்மீதும் எந்தக் காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் எழுதப்பட்டது''. உண்மையில் ஒட்டுமொத்த இனத்தாரின் வருத்தமெல்லாம் இவ்வரலாற்றை அதுவும் இரு சாதியினருக்கு உண்டான பகையை மீண்டும் நினைவுபடுத்தி சந்தையில் பேசுவதற்கு சூழ்நிலை உருவாக்கியதுதான் எங்கட்கு வருத்தமளிக்கிறது. "*சினம் கொல்லாத இனம் பிணத்திற்குச் சமம்*''. தாங்கள், மறக்கப்பட்டிருந்த கதையை இளைய தலைமுறையினருக்கு மத்தியில் புத்துணர்ச்சிப் பெறச் செய்துள்ளீர்கள்.

இப்பகையை கீழே விவரித்துள்ள சரித்திரகால நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டால் சாலச் சிறந்ததாக இருக்கும். முகமது நபிகள் இறந்தபிறகு அவருடைய இடத்தை நிரப்புவதில் தோன்றியதுதான் "ஸியா'', "சன்னி'' வகுப்பினர்கள். அந்த இரு வகுப்பினருக்கும் இடையில் இன்றுவரை தீராப்பகை இருந்து வருவது, முஸ்லிம் நாடுகளுக்கிடையே இந்தப்பகை போர் மூலம் தொடர்கிறது. அதே போல பாபர் மசூதி இடிக்கப்பட்டதனால் மறந்துபோயிருந்த இந்து முஸ்லிம் பகைமை மீண்டும் புத்துயிர் பெற்றது.

கோவைக்கிழார் ராமச்சந்திரன் செட்டியார் கொங்கு நாட்டு வரலாற்று நூலில் பக்கம் 67 இல் இவர்களது பகை இன்றும் போகவில்லை என்றும் அவ்விரு வகுப்பார்களுக்குள் இன்றும் பகை தொடர்கிறது என்றும் அவைகளைத் தற்போது "தேர்தலில் காணலாம்'' என்று எழுதியிருப்பது ஒரு தொலைநோக்கான உண்மை.

அண்மையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அரவக்குறிச்சித் தொகுதியில் "கே.சி. பழனிச்சாமி'' தேர்வு பெற்றதில் அந்தத் தொகுதியில் வாழ்ந்து வருகிற கொங்கு வேட்டுவக் கவுண்டர்களில் சுமார் 30 ஆயிரம் வாக்குகளும் இஸ்லாமியர்களின் ஒட்டுமொத்த வாக்குகளும் சேர்ந்து தான் அவருக்கு வெற்றித் தேடித் தந்தது. கோவை அறிஞர் இராமச்சந்திரச் செட்டியாரின் கூற்றை மெய்ப்பித்துள்ளது.

இப்படிக்கு,

எஸ். கோபாலன் கவுண்டர்.